புதுக்கவிதை
அணிவகுப்பு

மணிவாசகர் பதிப்பகம்
Eswari

மணிவாசகர் பதிப்பகம்

புதுக்கவிதை அணிவகுப்பு

(51 கவிஞர்களின் புதுக்கவிதைகள்)

தொகுப்பு :

டாக்டர். இரா. மோகன்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

மதுரை.

மணிவாசகர் பதிப்பகம்

55, லிங்கித்தெரு, சென்னை-600001.

முதற் பதிப்பு : 25, மார்ச், 1993.

உரிமை செறிவு

பதிப்பாசிரியர் :
ச. மெய்யப்பன், எம். ஏ.

விலை ரூ. 10-00
அச்சாக்கம் : அகரம், சிவகங்கை.

கிடைக்குமிடம் :

மணிவாசகர் நூலகம்

12-பி, மேல சன்னதி, சிதம்பரம்-608 001.
55, லிங்கித் தெரு, சென்னை-600 001.
28-ஏ, வடக்கு ஆவணிமூல வீதி,
மதுரை-625 001
15, ராஜ வீதி, கோயமுத்தூர்-641 001.
28, கிளைவ்ஸ் கட்டிடம், தெப்பக்குளம்,
திருச்சி-620 002.

போன் : சென்னை 513707, சிதம்பரம் : 2799

முன்னுரை

புதுக்கவிதைத் திறன்

“யாப்புடைத்த கவிதை
அணையுடைத்த காவிரி.
யாப்பற்ற கவிதை
இயற்கையெழில் இருக்க
செயற்கையணி எதற்கென்று
உடையுடன் ஒப்பனையும்
நீக்கிவிட்ட கன்னி.” [1]

—சி. மணி

“இலக்கணச் செங்கோல்
யாப்புச் சிம்மாசனம்
எதுகைப் பல்லக்கு
மோனைத் தேர்கள்
தனிமொழிச் சேனை
பண்டித பவனி

இவை எதுவும்
இல்லாத—
கருத்துக்கள் தம்மைத்
தாமே ஆளக்
கற்றுக் கொண்ட
புதிய மக்களாட்சி
முறையே
புதுக்கவிதை.” [2]

—மு. மேத்தா

---

1 சி. மணி, வரும் போகும், ப. 61.
2 மு. மேத்தா, ஊர்வலம், ப. 70.

''புதுக்கவிதை
என்பது
சொற்கள் கொண்டாடும்
சுதந்திர தின விழா.'' [3]

—இரா.வைரமுத்து

''சொற்களை ஆயுதங்களாகக் கையாளும் பக்குவம், பழைய யாப்பில் உள்ளதைவிட அர்த்தஆழமுடைய சந்தநுட்பம், சுண்டக் காய்ச்சிக் கடைசி நிலைக்குக் கெட்டிப்படுத்தும் வடிவ அமைப்பு, உள்ளடக்கமே வார்ந்து அமையும் உத்திப் புதுமை, இவை எல்லாவற்றையும்விடப் புதியபார்வை, புதிய உள்ளடக்கம் இவை புதுக்கவிதையின் அவசியத் தேவைகள்.'' [4]

—அப்துல்ரகுமான்

''கவிதை நெடுங்கவிதையாக அமைந்தாலும் குறும்பாவாக அமைந்தாலும் சொற் சிக்கனமும் பொருட்செறிவும் புதுக் கவிதையின் அடிப்படையான குணங்கள் என்பதை நினைவில் நிறுத்துவது நல்லது.'' [5]

—பாலா

—இவைகள் எல்லாம் புதுக்கவிதையை அடையாளம் காட்ட முயன்ற சிலருடைய சிந்தனைச் சிதறல்கள்.

புதுக்கவிதையின் வருகை தமிழ்க் கவிதையின் பரிணமப் பாதையில் தவிர்க்க முடியாததாக — தடுக்கவும் முடியாததாக — அமைந்துவிட்டது. புதுக்கவிதை தோன்றியதே சரியா, தவரு என்ற வாதம் இன்று பொருளற்றுப் போய்விட்டது. புதுக்கவிதை இன்று கால நியாயம் ஆகிவிட்டது. அதன் ஆற்றலை, சாதனையை

---

3 இரா. வைரமுத்து, திருத்தி எழுதிய தீர்ப்புகள், ப. 9.
4 புதுக்கவிதை ஒரு கருத்தரங்கம், அன்னம் வெளியீட்டின் 1976 ஆம் ஆண்டு மலர், ப.6,
5 பாலா, புதுக்கவிதை ஒரு புதுப்பார்வை, ப. 121.

ஆராய வேண்டிய கால கட்டத்தில் இன்று நாம் வாழ்ந்து வருகிறோம்.

"சுவை புதிது, பொருள் புதிது, வளம் புதிது, சொல் புதிது, சோதி மிக்க நவ கவிதை, எந்நாளும் அழியாத மகாகவிதை' என்னும் கவியரசர் பாரதியாரின் வாக்கு, புதுக்கவிதைக்கு முற்றிலும் பொருந்துவதாகும். சுவையிலும், பொருளிலும், வளத்திலும், சொல்லிலும் பற்பல புதுமைகளைக் கொண்டு, சோதி மிக்க நவ கவிதைகளாய் எந்நாளும் அழியாத மகாகவிதைகளாய்ப் புதுக்கவிதைகள் விளங்குகின்றன.

சுவைப் புதுமை

புதுக்கவிதைகள் நகை, அழுகை முதலான எண் வகைச் சுவைகளின் களஞ்சியங்களாகத் திகழ்கின்றன. அங்கதச் சுவையும் முரண்சுவையும் இன்றைய புதுக்கவிதைகளில் பரவலாகக் காணப்படுகின்றன. சான்றாகச் சில புதுக் கவிதைகளைக் காண்போம்.

'நகை என்பது சிரிப்பு; அது முறுவலித்து நகுதலும், அளவே சிரித்தலும், பெருகச் சிரித்தலும் என மூன்று என்ப'[6] என்று மெய்ப்பாட்டியல் நூற்பா ஒன்றின் உரை விளக்கத்தில் பேராசிரியர் கூறுகின்றார். புதுக்கவிதைகளில் இம் மூன்று வகையான நகைகளும் விரவி வரக் காண்கிறோம்.

'உபதேசம் எல்லாம் ஊருக்குத் தானே தவிர தனக்கு இல்லை' என்பது ஒரு பழமொழி. எஸ். வைதீஸ்வரன் என்னும் புதுக்கவிஞர் இப்பழமொழியின் அடிப்படையில் புகை பிடிக்கும் பழக்கத்தைக் கேலி செய்து ஒரு கவிதை பாடியுள்ளார். 'உபதேசம்' என்னும் தலைப்பில் அமைந்த அக் கவிதை இதோ:

---

6 பேராசிரியர் உரை, தொல்காப்பியம் பொருளதிகாரம். பக். 4-5.

" 'நீ புகை பிடிக்காதே' என்று
என் தாத்தா தந்தைக்குச் சொன்னதை
என் மூலம் மகனும் தெரிந்துகொண்டான்
இது நிஜம்.

(ஆனல்) நாங்கள் யாவரும் விரும்பிக் குடிப்பது
மிக உயர்ந்த ரகம்.
என் பேரனே சாட்சி!"

பிறிதொரு புதுக்கவிஞர், 'இந்தத் தேசத்திலேயே மிகவும் உயர்ந்தவன் கிராம வாசியா? நகரவாசியா?' என்னும் ஒரு சிக்கலான கேள்வியைக் கேட்டுவிட்டு, அவரே நகைச்சுவை ததும்பும் வகையில் ஒரு பதிலையும் கூறுகின்ருர்: 'இல்லை விலைவாசி!' இந்த நாட்டில் யாருடைய கட்டுப்பாட்டிற்கும் அடங்கி நிற்காமல், மிக உயரத்தில் ஏறி நிற்கும் விலைவாசியைப் பற்றிய இக் கவிதை படிப்பவரை முறுவலித்து நகுமாறு செய்கின்றது.

நா. காமராசனின் 'ஒரு சேரிக் கிராமமும் தபால்காரரின் மரணமும்' என்னும் கவிதை அவலச் சுவையைச் சித்திரிப்பதில் சிறந்து விளங்கக் காண்கிறோம். நாட்டுப் புறப்பாடல் வகைகளுள் ஒன்றான ஒப்பாரிப் பாடலின் மெட்டில் அமைந்த அக் கவிதையின் ஓர் உருக்கமான பகுதி இதோ:

"எழுத்துச் சுமைகாரர்
எங்க ஊரு தபால்காரர்
எழுத்து மங்கும் சாயங்காலம்
எமனோடு போனதென்ன?

கடுதாசி குடுத்தவுக
கைவீசிப் போனதென்ன!
காலன் எமராஜன்
கைநாட்டுப் பேர்வழியோ?

மசானத்துத் தீ கூட
தபால்பெட்டி நிறமிருக்கும்
ஜனங்களெல்லாம் கடுதாசி
ஜனனமரணம் தபால்காரர்.''

ஒரு சேரிக் கிராமத்தில் நிகழ்ந்த தபால்காரரின் மரணத்தைக் கவிஞர் பாடியிருக்கும் பாங்கு படிப்பவர் உள்ளத்தைப் பாகாய் உருக்குவதாகும். தபால்காரரின் மரணத்தைப் பற்றிய பாடல் என்பதால், இதில் எழுத்து, கடுதாசி, கைநாட்டு, தபால்பெட்டி போல்வன இடம் பெற்றுள்ளன!

அங்கதச் சுவையோடு கவிதை படைப்பதில் இன்றைய புதுக்கவிஞர்கள் தனிப்பட்ட ஆர்வமும் ஈடுபாடும் காட்டி வருகின்றனர். செம்பொருள் அங்கதம், பழிகரப்பு அங்கதம் என்னும் இரு வகை அங்கதத்திற்கான சான்றுகளையும் இன்றைய புதுக்கவிதைகளில் பரவலாகக் காண முடிகின்றது. புதுமைப்பித்தன் 'இணையற்ற இந்தியா' என்னும் கவிதையில் நமது நாட்டில் நிலவும் இழிநிலையை அங்கதச் சுவையோடு வெளியிடுகின்றார்; 'இந்தியா தேசம்—அது இணையற்ற தேசம்!' என்னும் வரிகள் கவிதையின் தொடக்கத்திலும் முடிவிலும் அமைந்து அங்கதச் சுவைக்கு மேலும் வலுவூட்டுகின்றன. கவிதையின் ஒரு பகுதி வருமாறு:

''இந்தியா தேசம்—அது
இணையற்ற தேசம்...
வேதம் படித்திடுவோம்
வெறுங்கை முழம் போட்டிடுவோம்!
சாதத்துக்காகச் சங்கரனை விற்றிடுவோம்!
அத்தனைக்கும் மேலல்லோ
அஹிம்சைக் கதைபேசி
வித்தகனும் காந்தியினை
விற்றுப் பிழைக்கின்றோம்!''

'நட்பு', 'நட்பு ஆராய்தல்', 'பழைமை', 'தீ நட்பு', 'கூடா நட்பு' என்னும் ஐந்து அதிகாரங்களில் நட்பின்

அருமை பெருமைகளை எடுத்துரைப்பார் வள்ளுவர். இன்றைய நட்பில் முகம் நகுதலே மேலோங்கிக் காணப் படுகின்றது; அகம் நகுதல் என்பது அருகிப் போய்விட் டது. உயரிய நட்பில் காலப் போக்கில் நேர்ந்த இம் மாசினை—விரிசலை—ஒரு புதுக்கவிதை அங்கதக் குறிப் போடு சாடுகின்றது. 'பெரியர்' என்னும் தலைப்பில் அமைந்த அந்தக் கவிதை இதோ:

"உயிருக்கு உயிராய்க்
கூடிக் குலவும்
நண்பர்கள் இருவர்
உயர் பதவிக்கு மனுப்போட்டனர்

ஒருவருக்கு ஒருவர்
சொல்லிக் கொள்ளாமல்—
'சொல்லாமல் செய்வர் பெரியர்!' "

முரண் சுவையைச் செம்மையோடும் வலிமையோடும் கையாளுவதில் இன்றைய புதுக்கவிஞர்கள் சிறந்து விளங்குகின்றனர். சான்றாக, தமிழன்பனின் 'அடை யாளம்' என்னும் கவிதையைச் சுட்டலாம். "காந்தி கண்ட இராம ராஜ்யத்தில் கூனி உண்டா?' என்று கேட்டு விட்டு, தம் கேள்விக்கான பதிலையும் தொடர்ந்து கூறுகிறார் கவிஞர்:

"காந்தி கண்ட
இராம ராஜ்யத்தில்
கூனி உண்டா?
உண்டு.
நிமிர்ந்திருப்பாள்
யாருக்கும் அடையாளம்
தெரியாது."

"நாங்கள் சேற்றில்
கால் வைத்தால் தானே
எவரும்
சோற்றில் கை வைக்க முடியும்?"

என 'மண்ணின்மைந்தர்'களின்—உழவர்களின்— கூற்ருக வரும் கவிதைப் பகுதியிலும் முரண்சுவையின் ஆற்றலையும் அழுத்தத்தையும் உணர்ந்து கொள்ள முடியும்.

பொருட்புதுமை

பாலா கூறுவது போல், 'புதிய வாழ்க்கைக் களங்கள் சமூகப் பொருளாதார மாறுதல்கள், மாறி வரும் மனித உறவுகள், பண்பாட்டுச் சிக்கல்கள், புதிய சமூக அங்கீகாரங்கள், சினிமாவும் பத்திரிகைகளும் ஏற்படுத்த நினைக்கும் ஜனரஞ்சகக் கலாசாரம், நடைமுறை அரசியல்—ஆகியவற்றிலிருந்து இன்றைய வாழ்க்கை பிறப்பெடுக்கிறது. இவற்றின் விளைவாகவும் எதிர்விளைவாகவும்இன்றையஇலக்கியப் படைப்பு நிகழ்கிறது.''[7] இன்றைய இலக்கியப் படைப்பாளிகள் இந்த வாழ்க்கையைக் கூர்ந்து நோக்குகின்றனர்; துருவி ஆராய்கின்றனர்;துணிவோடு விமர்சனம்செய்கின்றனர். உண்மைகளை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றனர்.

இன்றைய வாழ்க்கை மனிதனுக்குத் தரும் அனுபவங்கள் நுட்பமானவை; சிக்கலானவை; கலவையானவை; நேற்றைய மனிதன் அனுபவித்து அறியாதவை. இவ்வாழ்க்கை உணர்த்தும் அனுபவங்களும் உணர்ச்சிகளும் முடிவுகளும் உண்மைகளும் இன்றைய புதுக்கவிதைகளுக்கு அடிப்படையாக அமைகின்றன. ஒரு சான்ருல் இக் கருத்தினை விளக்கலாம்.

''ஒரு நாள் உணவை ஒழி என்ருல் ஒழியாய், இருநாளுக்கு ஏல் என்ருல் ஏலாய்—ஒருநாளும் என் நோவு அறியாய், இடும்பைகூர் என் வயிறே! உன்னேடு வாழ்தல் அரிது'' என்று 'நல்வழி'ப் பாடல் ஒன்றில் (11) வயிற்றுடன் தாம் படும் வேதனையைப் பாடு

---

7 பாலா, புதுக்கவிதை ஒரு புதுப்பார்வை, பக் 17-18.

வார் ஔவையார். இன்றைய உலகியலில் ஆறறிவு படைத்த மனிதன் தன் ஒருசாண் வயிற்றுக்காக என்னவெல்லாம் செய்கிருன்! அவனுடைய அகராதியில் 'எல்லாமே வயிற்றுக்காகத் தானே?' இவ் அவல நிலையைக் கவிஞர் ஷண்முக சுப்பையா ஒரு கவிதையில் அழகுறச் சித்திரிக்கின்ருர். 'வயிறு' என்னும் தலைப்பில் அமைந்த ஆக்கவிதை இதோ:

''தலையைச் சொறி!
நாக்கைக் கடி!
பல்லை இளி!
முதுகை வளை!
கையைக் கட்டு!
காலைச் சேர்!
என்ன இது?
வயிற்றைக் கேள்,
சொல்லுமது.''

'வயிற்றுப்'பாட்டிற்காக ஒரு மனிதன் தலையைச் சொறிந்து, நாக்கைக் கடித்து, பல்லை இளித்து, முதுகை வளைத்து, கையைக் கட்டி, காலைச் சேர்த்து, என்ன ஏது என்று கேட்காமல் வாயைப் பொத்தி வாழ வேண்டியிருக்கிறது! தலை—நாக்கு—பல்—முதுகு—கை—கால்—வயிறு என்னும் வைப்பு முறை முன்னைய 'கேசாதி பாத' அமைப்பினை நினைவூட்டுவதாக உள்ளது.

இன்றைய நடைமுறை அரசியலையும் அரசியல்வாதிகளையும் சாடுவதில் புதுக்கவிதைகள் தீவிரமாக ஈடுபடுகின்றன. மக்களால், மக்களுக்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்கள் மன்றத்திற்குச் செல்லும் இன்றைய. அரசியல்வாதிகளின் இழிநிலை சொல்லும் 'தரமன்று. இவ்இழிநிலையைக் கவிஞர் இரா. வேலுச்சாமி 'சட்டசபை'... என்னும் தம் கவிதையில் சீற்றத்தோடு சாடுகின்ருர்:

''நெருப்பாய்ப்
பிரச்னைகள்
நிறைந்து கிடக்க

செருப்புகள் மட்டுமே
சீறிப் பாயும்...

இது
சட்ட சபையல்ல
'மட்ட சபை...' ''

வேலையின்மை, வரதட்சணை, விலைவாசி உயர்வு, கூட்டுக் குடும்ப வாழ்க்கையின் சிதைவு, நாகரிக பண்பாட்டுச் சீர்குலைவு, பொருளாதார, அரசியல் சூழல், நடுத்தர வர்க்கத்தினரின் அவலம், வேலை பார்க்கும் பெண்களின் பிரச்சனை, பாலுறவுச் சிக்கல்—இங்ஙனம் இன்றைய புதுக்கவிதைகளின் பாடுபொருள் எல்லை பரந்து விரிந்து, வாழ்க்கையின் எல்லா நிலைகளையும் துறைகளையும் தொட்டு நிற்கிறது எனலாம்.

புதுமை வளம்

'புதுக்கவிதை' என்று அழைக்கப்பட்டாலும், அதில் மரபின் தாக்கம் அல்லது சாயல் படிந்திருக்கவே செய்கின்றது. மரபைப் புறக்கணித்த அல்லது மீறிய புதுக் கவிதைகளை விட மரபினைத் தழுவி அல்லது மரபின் அடியில் மலர்ந்த புதுக்கவிதைகள் சிறந்து விளங்குகின்றன. வேறு வகையாகவும் இக் கருத்தை விளக்கலாம். இன்று புதுக்கவிதைத் துறையில் பெயரும் புகழும் பெற்றிருக்கும் கவிஞர்களுள் பெரும்பாலானோர் ஒரு காலத்தில் மரபுக் கவிதை எழுதியவர்களே ஆவர். நா. காமராசன், மீரா, மு.மேத்தா, அப்துல் ரகுமான், தமிழன்பன், சிற்பி, இரா.வேலுச்சாமி முதலானோர்இவ் வகையில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

காணி நிலம், நிலத்தினிடையே ஓர் மாளிகை, கேணி அருகினிலே பத்துப் பனிரண்டு தென்னை மரம், முத்துச் சுடர் போலே நிலா ஒளி, கத்தும் குயிலோசை, இளந் தென்றல், ஒரு பத்தினிப் பெண், இருவரது கூட்டுக் களியினிலே கவிதைகள், அன்னையின் காவல், பாட்டுத் திறத்தால் வையம்பாலித்திடல்—என அன்னை பராசக்தி

யிடம் தம் தேவைகளை வெளியிட்டார் கவியரசர் பாரதியார். பாரதியின் ‘காணி நிலம் வேண்டும்’ என்னும் கவிதையை நினைவூட்டும் வகையில், பசுவய்யா என்ற இன்றைய புதுக்கவிஞர் தமது தேவைகளை ஒரு கவிதையில் வெளியிடுகின்றார்:

“கொஞ்சம் முகம் பார்த்து தலைசீவ ஒரு சந்திரன்
லோஷன் மணக்கும் பாத்ரூம்
என் மனக் குதிரைகள் நின்று
அசைபோட ஒரு லாயம்
என் கையெழுத்துப் பிரதியில் கண்ணோட
முகங் கொள்ளும் ஆனந்தச் சலனங்கள்
நான் காண, ஒரு பெண்
சிந்திக்கையில் கோத ஒரு வெண்தாடி
சாந்த சூரியன்
லேசான குளிர்
அடி மனத்தில் கவிதையின் நீரோடை.”

இங்ஙனம் மரபும் புதுமையும் கை குலுக்கிக் கொள்ளும் இடங்களை இன்றைய புதுக்கவிதைகளில் பரவலாகக் காண முடியும்.

மரபுக் கருத்தினைக் காலப் போக்கிற்கு ஏற்ற வகையில் புது வண்ணத்தில் பாடும் பாங்கினையும் இன்றைய புதுக் கவிஞர்களிடம் சிறப்பாகக் காண முடிகின்றது. இக் கருத்தினை ஓர் எடுத்துக்காட்டால் விளக்கலாம்.

“ஓடக் காண்பது பூம்புனல் வெள்ளம்
ஒடுங்கக் காண்பது யோகியர் உள்ளம்
வாடக் காண்பது மின்னார் மருங்கு
வருந்தக் காண்பது சூலுளை சங்கு

போடக்காண்பது பூமியில் வித்து
புலம்பக் காண்பது கிண்கிணிக் கொத்து
தேடக் காண்பது நல்லறம் கீர்த்தி
திருக்குற்றாலர்தென் ஆரிய நாடே”

—எனத் திருக்குற்றாலக் குறவஞ்சியில் வரும் குறத்தி, பாட்டுடைத் தலைவியான வசந்தவல்லியிடம் தன் நாட்டு வளம் கூறுவாள்(பா.9)

கவிஞர் தமிழ்நாடன் இக்குறவஞ்சிப் பாடலின் அமைப்பினை எடுத்துக்கொண்டு, தம் நாட்டு நடப்பைப் பாடற்பொருளாக்கி ஒரு கவிதை புனைந்துள்ளார். 'குற்றவஞ்சி' என்னும் தலைப்பில் அமைந்த அக் கவிதை வருமாறு:

''ஓடக் காண்பது
என்னவர் மானம்
ஒடுங்கக் காண்பது
ஒரு ஜாண் வயிறு

வாடக் காண்பது
தேசீய உணர்வு
வருந்தக் காண்பது
விடுதலை வீரர்

போடக் காண்பது
ஜால்ரா குல்லாய்
புலம்பக் காண்பது
தேர்தலில் தோற்றோர்

தேடக் காண்பது
உழைக்காத செல்வம்
திருடர் மலிந்த
நவபாரத நாடே...''

திரிகூடராசப்பக் கவிராயரின் குறவஞ்சிப் பாடலையும், தமிழ்நாடனின் புதுக்கவிதையையும் ஒருங்கு வைத்து ஆராயும் போது, மரபுக் கருத்து காலக் சூழலுக்கு ஏற்பப் புதுமை வண்ணத்தை ஏற்றுக் கொள்ளும் பாங்கினை உணர்ந்து கொள்ள முடியும்.

முன்னைய மரபை வளர்க்கின்ற வகையில் அமைந்த புதுக்கவிதைகளும் உண்டு. அப்துல் ரகுமானின்

கண்ணும் எழுதேம்' என்ற கவிதை இவ்வகையில் குறிப்பிடத்தக்கதாகும். 'கண்ணுள்ளார் காத லவராகக் 'கண்ணும், எழுதேம் கரப்பாக்கு அறிந்து' என்பது குறள்(1127). வள்ளுவர் படைக்கும் காதலி ,கண்ணில் மைதீட்டாமைக்கு நுட்பமான ஒரு காரணத்தைக் கூறு கிருள். அப்துல் ரகுமான் படைக்கும் காதலியோ ஆறு காரணங்களை அடுக்கிக் கூறுகிருள். அவளது வாய் மொழி இதோ:

''கண்ணுக்குள் என்
காதலர்
அவர் முகத்தில்
கரி பூசலாமா?

என் சூரியன் மீது
இருட்டைத் தடவுவதோ?

வீட்டிற்குள்ளே அவர்;
வாசலில் எதற்கு
வரவேற்புக் கோலம்?

அவனையே தீட்டி
அழகு பெற்ற கண்ணுக்கு
மையலங்காரம்
வேண்டுமா?

கண்ணைவிட மென்மையானவர்
காதலர்
கோல் பட்டால் வலிக்காதா?

அவரை வைத்த இடத்தில்
வேறொன்றை வைப்பது
கற்புக்கு இழுக்கல்லவா?''

புதிய சொற்கள்

நல்ல கவிஞருக்குப் புதிதுபுதிதாகச் சொற்களைப் படைத்து உலவ விடும் உரிமை உண்டு. புதுக்கவிஞர் களும் இந்த உரிமையை நன்கு பயன்படுத்திக் கொண்

டுள்ளனர். காட்டாக, ஓரிரு கவிதைகளைக் காண்போம். சி. மணி 'மினி யுகம்' என்ற தலைப்பில் ஒரு புதுக்கவிதை பாடியுள்ளார். அதில் அவர் மனிதன்— மாமனிதன்— என்னும் சொல்லாட்சிகளுக்கு நிகராக, 'மினிதன்' என்ற புதிய சொல்லாட்சியைக் கையாண்டுள்ளார். தனிபெரும் மனிதரின் கொற்றம் ஒழிந்தது என்றும், மினியுகம் சனித்து விட்டது என்றும் கவிதையின் தொடக்கத்தில் கூறும் அவர், தொடர்ந்து இவ்வாறு பாடுகிறார்:

''இனி
மினிமக்கள் காலம்
மனிதனை விட்டு
மினி தனைப் பாடு போற்று
இனி என் பேச்சைக் கேள்-ஏ
னெனி லெனக்குத் தெரியும் நானொரு
மினி மேதை.''

'மினி யுகம்', 'மினி மக்கள்', 'மினிதன்', 'மினிமேதை' ஆகியன இக் கவிதையில் இடம்பெற்றுள்ள புதிய சொற்கள் ஆகும்.

'ஒரு தூங்காத தாலாட்டு' என்பது கவிஞர் புவியரசின் குறிப்பிடத்தக்க கவிதைகளுள் ஒன்று. 'கறுப்பா, நீ கண்ணுறங்கு'—'தப்பிப் பொறந்தவனே, தரித்திரமே கண்ணுறங்கு', 'வெறும் பயலே கண்ணுறங்கு' என்றெல்லாம் புதிய முறையில் குழந்தைக்குத் தாலாட்டுப் பாடும் கவிஞர், ஓர் இடத்தில் பின்வருமாறு பாடுகின்றார்:

''ஏழு கடல் தாண்டி—உங்கப்பன்
ஏலக்காய் மலையேறி
பசியாப் பழம் பறிக்கப்
போயிருக்கார் கண்ணுறங்கு!''

இப் பகுதியில் இடம் பெற்றுள்ள 'பசியாப் பழம்' என்னும் சொல்லாட்சி கவிஞரால் புதுவதாகக் கையாளப்பட்ட ஒன்றாகும்.

சொற் சிக்கனமும் பொருட் செறிவும் புதுக்கவிதையின் அடிப்படையான பண்புகள் ஆகும். இன்றைய புதுக் கவிஞர்கள் தம் எண்ணத்தைச் சுற்றி வளைத்துச் சொல் லாமல் நேரடியாக வெளியிடுகின்றனர். அவர்கள் அலங்காரத்திற்காகவோ அல்லது ஓசைக்காகவோ தேவையற்ற, வீணான, வெற்றுச் சொற்களைச் சேர்ப்பது இல்லை; உள்ளடக்கத்திற்கு ஏற்ற சொற்களையே தேர்ந்து கையாளுகின்றனர். செறிவும் இறுக்கமும் கொண்ட ஜப்பானிய ஹைக்கூ கவிதைகளின் செல் வாக்கு இன்றைய புதுக்கவிஞர்களிடம் காணப்படு கிறது. காட்டாக, சிங்கப்பூரைச் சார்ந்த கவிஞர் க. இளங்கோவனின் 'மனித உரிமை' என்னும் கவிதை யைச் சுட்டலாம்:

''தட்டுங்கள்
தடுக்கப்படும்.
சுட்டுங்கள்
கொடுக்கப்படும்.''

குறியீடு, படிமம் போன்ற புதிய புதிய வெளியீட்டு உத்திகளையும் இன்றைய புதுக்கவிதை தன்னகத்தே கொண்டுள்ளது.

''பூக்களிலே நானுமொரு
பூவாய்த்தான் பிறப்பெடுத்தேன்!

பூவாகப் பிறந்தாலும்
பொன்விரல்கள் தீண்டலையே!

பொன்விரல்கள் தீண்டலையே—நான்
பூமாலையாகலையே.''

என்னும் மு. மேத்தாவின் கவிதை குறியீட்டைச் சிறப்பாகப் பயன்படுத்துகிறது. 'அரளிப் பூ அழுகிறது' என்ற தலைப்பில் அமைந்த இந்தக் கவிதையில் கவிஞர் அரளிப் பூவின் அழுகையைப் படம்பிடிக்கவில்லை;

'கை படாத ரோஜா'க்களாக இருக்கும் வயது முதிர்ந்த கன்னியரின் உள்ளக் குமுறலைக் குறிப்பால் புலப் படுத்தி விடுகிறார். அரளி, பொன் விரல்கள், பூமாலை ஆகிய சொற்கள் ஒரு படிமப்பண்புக்குள் இயைந்து நின்று குறியீட்டுத் திறன் பெற்றுவிடுகின்றன. மண மாலை என்ற பொருளை 'பூமாலை' என்னும் சொல் குறிப் பால் உணர்த்திவிடுகிறது. இசைத்தன்மை மிக்க குறி யீடு இது. கவிதையின் இசைத்தன்மையில் தொனிக்கும் சோகமே இங்கே பொருளாகி விடுகிறது.

படிமங்களைச் சிறப்பாகக் கையாளும் திறமையையும் இன்றைய புதுக்கவிதைகளில் பரவலாகக் காண முடி கின்றது. சிற்பியின் 'சிகரெட்' என்ற கவிதை இவ் வகையில் குறிப்பிடத்தகுந்த ஒன்றாகும்.

''சித்திரப் பெட்டியில்
ஜிகினாப் படுக்கை;
நித்திரை கலைந்ததும்
நெருப்பு நீராட்டு...

கடையில் வெள்ளை
உடையில் இருந்துபின்
நெடு நெருப்பில்பாய்
ரஜபுத்திர ராணி...

இரு விரல் நடுவில்
புகையும் எரிமலை...

வயதும் சாதியும்
பார்க்காத ஞானி''

—என இக் கவிதையில் படிமங்கள் அடுக்கி வரும் பாங் கினைக் காணலாம்.

புதுக்கவிஞர்கள் தம் கவிதைகளில் கையாளும் உவமை களில் எளிமையும் புதுமையும் நிறைந்திருக்கக் காண்கி றோம். புதுக்கவிதை உலகில் ஓர் உவமைக் கவிஞராகப் பாராட்டப்பெறும் ஆர். எஸ் மூர்த்தியின் 'கிளிகள்' என்னும் கவிதை எளிய, புதிய உவமைகளால் ஆனது:

''கிளிகள்
பச்சைத் தாவணி போட்ட
பருவப் பெண்கள்

கழுத்தில்
கருக மணி மாலே அணிந்த
கல்லூரி மாணவிகள்

மூக்கு மட்டுமே
தெரியும் வண்ணம்
முகத்திரை இட்டுக் கொண்ட
முகலாய இளவரசிகள்...''

இங்ஙனம் 'நவ கவிதை' என்னும் பெயருக்கு ஏற்ப, இன்றைய புதுக்கவிதைகள் புதிய புதிய உத்திகளேயும் நயங்களேயும் கொண்டனவாய்த் திகழ்கின்றன.

காலத்தால் அழியாத மகாகவிதை

'புதுக்கவிதை காலத்தால் அழியாத மகாகவிதை ஆக முடியுமா'?— பலரும் கேட்கும் சிக்கலான கேள்வி இது. காலம் தான் இக் கேள்விக்கான பதிலேக் கூற முடியும். புதுமைப்பித்தன் கூறுவது போல் 'நல்ல இலக்கியம் என்ருல், எத்தனே நந்திகள் வழிமறித்துப் படுத்துக் கொண்டாலும் அது உரிய ஸ்தானத்தை அடைந்தே தீரும்'[8] காலத்தால் அழியாது வாழ்ந்தே தீரும்.

'இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து, கெடுக உலகு இயற்றியான்' (1062) என்று உலகைப் படைத்தவனுக்கே சாபமிட்டார் வள்ளுவர். வள்ளுவரின் சாபத்தை நினேவூட்டும் வகையில் நீலமணி என்னும் கவிஞர் ஒரு புதுக்கவிதை பாடியுள்ளார். அதில் அவர் கடவுளே நோக்கிக் காரசாரமான கேள்வி ஒன்றைக் கேட்டுள்ளார்:

''என்ன வரம் வேண்டும்
என்கிருர் கடவுள்.
அது தெரியாத
நீர் என்ன கடவுள்?''

---

8 புதுமைப்பித்தன் கட்டுரைகள், பக். 28

நான்கே வரிகளில் அமைந்த சின்னஞ்சிறு கவிதை இச் படிப்பவரை என்னவாய்ப் பாதித்து விடுகிறது! இத் தகைய நுண்மையான உணர்வுச் சித்திரிப்புகளாய் அமையும் புதுக்கவிதைகள் காலம் கடந்து நிற்க வல்ல னவாம்.

ஆத்மாநாம் என்னும் கவிஞர் (அண்மையில் தற்கொலை செய்து கொண்டு இறந்து போனவர்) வேறு ஒரு கோணத்தில் கடவுளைப் பற்றிப் பாடியுள்ளார். 'தரிச னம்' என்ற தலைப்பில் அமைந்த அவரது கவிதையும் நுண்மையான உணர்வின் நயமான படப்பிடிப்பாய் அமைந்துள்ளது. அக் கவிதை இதோ:

கடவுளைக் கண்டேன்
எதையும் கேட்கவே தோன்றவில்லை
அவரும் புன்னகைத்துப்
போய் விட்டார்
ஆயினும்
மனதினிலே ஒரு நிம்மதி.''

''நெல்லுக்கும் உமியுண்டு, நீருக்கும் நுரையுண்டு, புல்லிதழ் பூவுக்கும் உண்டு' என்பதுபோல், புதுக் கவிதையிலும் குறை உண்டு. புதுக்கவிதையின் வெளி யீட்டு முறையில் ஒரு பெரிய குறையாகச் சொல்லப் படுவது அதன் இருண்மை (obscurity) ஆகும். 'புதுக் கவிதை புரியவில்லை' என்பார்கள். ஆழ்ந்து சிந்தித் தால், இது புதுமையான—சோதனை ரீதியான—எந்த இலக்கியப் படைப்பிற்கும் எக்காலத்திலும் இருந்து வரக்கூடிய குறை கூறல்தான். தரமான—ஆழமான—கனமான—புதுமுறையில் அமைந்த எந்த இலக்கியப் படைப்பையும் கிரகித்துப் புரிந்து கொள்வதற்கு வாசக ருக்கு ஒரு பயிற்சியும் பக்குவமும் தேவை. தமிழவனின் 'புதுக்கவிதை நாலு கட்டுரைகள்', பாலாவின் 'புதுக் கவிதை ஒரு புதுப்பார்வை', அன்னம் வெளியீட்டின் 1976-ஆம் ஆண்டு மலர் முதலான ஆய்வு நூல்கள் இவ்வகையில் வாசகருக்கு வழிகாட்டத் தக்கவை.

இத்தொகுப்பு நூல்

'1934 முதல் சோதனை ரீதியான கவிதைகளை எழுதத் தொடங்கினேன்'' என்று தம் கவிதைத் தொகுப்பு நூலுக்கு எழுதிய முன்னுரையில் ந.பிச்சமூர்த்தி குறிப்பிட்டுள்ளார் 1934 முதல் 1984 வரையிலான கால கட்டத்தில் தோன்றிய 51 புதுக்கவிஞர்களின் படைப்புக்கள் இந் நூலில் தொகுத்துத்தரப்பட்டுள்ளன. புதுக்கவிதை இலக்கியத்தின் பன்முக ஆற்றலையும் அழகையும் புலப்படுத்தும் வகையில் இத் தொகுப்பில் கவிதைகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. 'மணிக்கொடி' 'கலா மோகினி', 'சரஸ்வதி', 'எழுத்து', 'நடை', 'ழ', 'தாமரை', 'கசடதபற', 'வானம்பாடி' ஆகிய இதழ்களில் எழுதி வெற்றி பெற்ற புதுக்கவிஞர்களின் படைப்புக்கள் இத் தொகுப்பில் இடம்பெறுகின்றன.

முன்னைப் பழைய இலக்கியங்களை முனைப்போடு வெளியிடும் மணிவாசகர் பதிப்பகத்தார், பின்னைப் புத்திலக்கியங்களின் வெளியீட்டிலும் ஆழ்ந்த கவனத்தைச் செலுத்துவது பாராட்டத்தக்கதாகும். இத் தொகுப்பு நூலையும் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவரும் வகையில் அழகுற வெளியிடும் பேராசிரியர் ச.மெய்யப்பன் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றி என்றும் உரியதாகும்.

மதுரை 625 021
31-8-1983

அன்புடன்,
இரா. மோகன்

---

9 ந. பிச்சமூர்த்தி, பிச்சமூர்த்தி கவிதைகள் 'வரலாறு', ப.6.

பொருளடக்கம்

எண்	கவிஞர்	கவிதை	பக்கம்
1.	ந. பிச்சமூர்த்தி	','	23
2.	புதுமைப்பித்தன்	இணையற்ற இந்தியா	25
3.	கு.ப. ராஜகோபாலன்	எதற்காக?	27
4.	மயன் (க. நா. சுப்ரமணியன்)	இளம்	28
5.	வல்லிக்கண்ணன்	ஒரு புத்தகம்	29
6.	சி.சு. செல்லப்பா	கணக்கு	31
7.	சி. மணி	மினி யுகம்	32
8.	ஷண்முக சுப்பையா	வயிறு	33
9.	நாரணோ ஜெயராமன்	பக்கத்தைப் புரட்டு	34
10.	'பிர்மீள்' தருமு: ஔரூப் சிவராம்	நாளை புரட்சி	35
11.	பசுவய்யா (சுந்தர ராமசாமி)	எனது தேவைகள்	36
12.	தி.சோ. வேணுகோபாலன்	நாகரிகம்	37
13.	எஸ். வைதீஸ்வரன்	உபதேசம்	38
14.	நா. காமராசன்	ஒரு சேரிக் கிராமமும் தபால்காரரின் மரணமும்	39
15.	மீரா	—	41
16.	தமிழன்பன்	அடையாளம்	42
17.	தமிழ்நாடன்	குற்றவஞ்சி	43
18.	சிற்பி	சிகரெட்	44
19.	தமிழவன்	யார் தெரியுமா?	46
20.	மு. மேத்தா	அரளிப்பூ அழுகிறது	47
21.	புவியரசு	ஒரு தூங்காத தாலாட்டு	48

22. சக்திக் கனல்	முதல் வேலை நிறுத்தம்	50
23. தேவதேவன்	—	51
24. தேனரசன்	ஒரு வேண்டாத தாலாட்டு	52
25. அபி	உள் பாடு	54
26. இன்குலாப்	இயற்கை ஏடுகள்!	55
27. ஞானக் கூத்தன்	தோழர் மோசிகீரனார்	56
28. அப்துல் ரகுமான்	கண்ணும் எழுதேம்	57
29. கொ.ச. பலராமன்	ஜப்தி	58
30. கொ.மா. கோதண்டம்	விளம்பரம்	59
31. கலாப்ரியா	குருடர் பள்ளியில் கொடியேற்றம்	60
32. க. இளங்கோவன்	மனித உரிமை	61
33. ஏ. தெ. சுப்பையன்	சோஷலிசத் தாலாட்டு	62
34. துரை. சீனிச்சாமி	கண் மூடல்	63
35. ஆர்.எஸ். மூர்த்தி	கிளிகள்	64
36. ஆத்மாநாம்	தரிசனம்	65
37. இரா. வேலுச்சாமி	சட்ட சபை...	66
38. நா. விச்வநாதன்	பரிசுக்காக	67
39. கல்யாண்ஜி	தகுதி	68
வண்ணதாசன்		
40. வண்ணநிலவன்	பல்லு	69
41. கந்தர்வன்	விடுகதை	70
42. இரா. வைரமுத்து	கணக்குப் பார்க்கையில்...	71
43. வாலி	ஆண்டவனுக்கே வெளிச்சம்	72
44. எஸ். அறிவுமணி	விடுமுறை விண்ணப்பம்	73
45. வ. தேனப்பன்	என்னைக் கவர்ந்தவர்	75
46. கோகிலா தங்கசாமி	—	76
47. கிரு. இராமநாதன்	மண்ணின் மைந்தர்கள்	77
48. நீலமணி	—	79
49. வெ. த. புகழேந்தி	தர மாணவன்	80
50. இரா. மோகன்	பெரியார்	81
51. நீல பத்மநாபன்	எழுத்து	82

1. ......

பகுத்தறிவுச் சந்தையில்
ஒவ்வொருவரும் கையில்
முற்றுப் புள்ளிகளை
மூர்க்கமாய் வைத்துக்கொண்டு
மனத்தில் பட்ட துறையில்
முளையடித்துக் கொண்டிருந்தார்.

சிலர் சுருதியுடன்
சிலர் வருணாசிரமத்துடன்
சிலர் சங்க இலக்கியத்துடன்
சிலர் கம்பருடன்
சிலர் விஞ்ஞானத்துடன்
சிலர் மார்க்ஸ் எங்கல்சுடன்
வேறு சிலர் எதனுடனோ.

ஒதுங்கி நின்ற சிலர்
மன இயலுக்கப்பாலே அடிசார்ந்த
மார்க்கத்தாரோடு
சிரித்துக் கொண்டிருந்தனர்
அவர்களிடம் முற்றுப் புள்ளியில்லை.

திடீரென்று என் கையைப் பார்த்தேன்
கமாத்தான் இருந்தது.

—ந. பிச்சமூர்த்தி*

---

*பிச்சமூர்த்தி கவிதைகள், சென்னை: எழுத்து பிரசுரம், முதல் பதிப்பு 1975, ப. 205, விலை ரூ. 10-00

2. 'இணையற்ற இந்தியா'

இந்தியா தேசம்—அது
இணையற்ற தேசம்!—என்று
யாங்களு மறிவோம் —வெள்ளை
ஆங்கில ரறிவார் பிள்ளைத்
துருக்கனு மறிவான்—அறிவால்
சூழ்ந்தது தொல்லை.

சிந்தையிலே பின்னிவைத்த சிலந்திவலைச் செல்வி
செல்வழியில் கண்ணியிட்டு செயத்தம்பம் நாட்டும்!
எந்தையர்கள் நாடல்லோ இமையவர்கள் நாடு!
இமவானின் ஆதரவில் இருந்துவரும் நாடு!
கந்தமலர் பூச்செறிவில் கடவுளர்க ளோடு
கன்னியர்கள் கந்தருவர் களித்துவளர் நாடு!
என்றுபல சொல்லியதை சொல்லளவில் நம்பி
எவனுக்கும் மண்டியிடும் ஏந்துபுய நாடு!
ஆற்றுக் கரையருகே அணிவயல்கள் உண்டு!
சோற்றுக்குத் திண்டாட்டம் சொல்லி முடியாது!

வேதம் படித்திடுவோம் வெறுங்கைமுழம்
போட்டிடுவோம்
சாதத்துக் காகச் சங்கரனை விற்றிடுவோம்!
அத்தனைக்கும் மேலல்லோ அஹிம்சைக் கதைபேசி
வித்தகனும் காந்தியினை விற்றுப் பிழைக்கின்றோம்!

இந்தியா தேசம்—அது
இணையற்ற தேசம்

—புதுமைப்பித்தன்*

*ரகுநாதன் (தொகுப்பாசிரியர்). புதுமைப்பித்தன் கவிதைகள், மதுரை: மீனாட்சி புத்தக நிலையம், மூன்றாம் பதிப்பு 1978, பக். 63-64, விலை ரூ. 3-50

3. எதற்காக?

பாம்பே, படமெடுத்து நீ ஏன் இப்படி
மகுடி முன் மெய்மறந்து ஆடுகிருய்?
பாம்பாட்டிக்குப் பிழைப்பளிக்கவா?
இல்லே, இல்லே!
ஆடியாடியுன் ஆவலேத் தீர்த்துக்கொள்ள!

ராதே, குழலோசை கேட்டேன் நீ
காதல் கொண்டு கானகமெல்லாம் ஓடுகிருய்?
கண்ணனுக்குன் கண்ணேக்கின்ப மளிக்கவா?
இல்லே, இல்லே!
ஓடியோடியுன் உள்ளப் பூரிப்பைக் கொட்ட!

பெண்ணே, புருஷனுக்கேன் இப்படிப் பணிந்து
அடிமை போல இட்டதெல்லாம் செய்கிருய்?
'பண்ணு' என்று சொல்லும்
புருஷனுக்கஞ்சியா?
இல்லே, இல்லே!
இட்டதைச் செய்துசெய்து
உணர்ச்சியை அடக்க.

—கு. ப. ராஜகோபாலன்†

---

†கு. ப. ராஜகோபாலன், சிறிது வெளிச்சம் சென்னே: வாசகர் வட்டம், முதற்பதிப்பு 1969: ப. 139. விலே ரூ. 8-00

4. இனம்

ஊருக்கு உழைத்தவன்
ஆண்டியானான்;
பாருக்காகப் பாடுபட்டவன்
போண்டியானான்;
அவனை ஏவி வேலை வாங்கியவன்
மந்திரியானான்.

—மயன் (க.நா.சுப்ரமண்யம்)*

---

* *மயன் கவிதைகள், மதுரை: பி.கே.புக்ஸ், முதற் பதிப்பு 1977. ப. 121, விலை ரூபாய் பதினாறு.*

5. ஒரு புத்தகம்

வாழ்க்கை
என்றொரு புத்தகம்;
பக்கங்கள் எத்தனை
யார் அறிவார்?
வெள்ளைத் தாள்களை
அள்ளிச் சேர்த்து
புத்தகம் எனத் தந்த
பித்தன் எவனோ
யார் அறிவார்!

ஒவ்வொரு உயிர்க்கும்
தனித்தனிப் புத்தகம்
மெள்ள மெள்ள அதை
முடிக்கும் வேலையும்
அவ் உயிர்க்கேயாம்!
நல்ல புத்தகம் ஆக்கும்
நபரும் யாரே யாம்?

பிள்ளைக் கிறுக்கல்,
கோடுகள், கீறல்கள்,
குழப்பச் சித்திரம்;

ஓடும் நீரில்
ஆடும் பூச்சி போல்
எழுதிடு வண்ணங்கள்;
பொருந்தாக் கோலம்,
முடியாக் கதைகள்;
அடித்தல், திருத்தல்,
சாயம் பூசல்,
அள்ளித் தெளித்தல்,
பூசி மெழுகுதல்,
தாளைக் கிழித்தல்,
தாறு மாருய்த்
தீட்டி வைத்தல்—

இப்படி எல்லாம்
பக்கங்கள்!

'நல்ல புத்தகம்'
எங்கே முடியும்?
எப்படி அமையும்?

—வல்லிக்கண்ணன்*

*வல்லிக் கண்ணன், அமர வேதனை, சென்னை: எழுத்து பிரசுரம், முதல் பதிப்பு 1974, பக். 33-34 விலை: ரூ.3-00

6. கணக்கு

நடந்தேன்
நடந்தேன்
நடந்து கொண்டே போனேன்;
மைல் கணக்கு சொன்னார்கள்
யாரோ,
கால் வலித்தது.

சுற்றினேன்
சுற்றினேன்
சுற்றிக் கொண்டே இருந்தேன்;
உஷ்ணக் கணக்கு சொன்னார்கள்
யாரோ,
உடம்பு சுட்டது.

வாழ்ந்தேன்
வாழ்ந்தேன்
வாழ்ந்து கொண்டே வந்தேன்;
வயதுக் கணக்கு சொன்னார்கள்
யாரோ,
நெஞ்சு கிழண்டது.

—சி.சு.செல்லப்பா ‡

‡ சி.சு. செல்லப்பா, மாற்று இதயம், சென்னை; எழுத்து பிரசுரம், முதல் பதிப்பு 1974, ப. 15. விலை. ரூ. 4.

7. மினி யுகம்

சனி த்து விட்டது
மினி யுகம்; ஒழிந்தது
நனி பெரும் மனிதர் கொற்றம்.
இனி
மினிமக்கள் காலம்
மனி தனை விட்டு
மினி தனைப் பாடு போற்று
குனி என் பேச்சைக் கேள்.ஏ
னெனி லெனக்குத் தெரியும் நானொரு
மினி மேதை

—சி.மணி

* சி.மணி, வரும் போகும், சென்னை: க்ரியா, முதற்பதிப்பு 1974, ப. 62, விலை ரூ.10.



8. வயிறு

தலையைச் சொறி!
நாக்கைக் கடி!
பல்லை இளி!
முதுகை வளை!
கையைக் கட்டு!
காலைச் சேர்!
என்ன இது?
வயிற்றைக் கேள்,
சொல்லுமது.

—ஷண்முக சுப்பையா¶

¶ ஷண்முக சுப்பையா கவிதைகள், சென்னை: எழுத்து பிரசுரம் முதல் பதிப்பு 1975, ப. 59. விலை ரூ.5.



9. பக்கத்தைப் புரட்டு

சூரியன் காய்கையில்
ஈடு கொடுத்துப் பொசுங்கும் நீங்கள்,
அவன் உறங்கியதும்
மெல்லத் தப்பித்து வருவதில்லை
அவனுடன் சேர்ந்து உறங்கி விடுகிறீர்கள்
நிலவின் குளிர்ச்சி பற்றி
உங்களுக்கென்ன தெரியும்.

—நாரணோ ஜெயராமன்*

---

* நாரணோ ஜெயராமன், வேலி மீறிய கிளை, சென்னை: க்ரியா வெளியீடு. முதற்பதிப்பு. 1976. பக், 58. விலை ரூ. 6.



10. நாளை புரட்சி

வயிற்றில் குடியிருந்து
வாழ்ந்து பசிக்கிறது
நிகழ்காலம்.
பசியில் அடைத்த
காதிலும் விழுகிறது
'நாளை புரட்சி
சரித்திரம் நமது கட்சி'
என்றென்
பசியைக் கூட
ஜீரணிக்க முயற்சிக்கும்
ஏப்பக் குரல்கள்.

ஆனால்,
நாளைகள் ஒவ்வொன்றும்
நாள் தோறும் நேற்றாக
தன்பாட்டில் போகிறது
தான் தோன்றிச் சரித்திரம்.

—'பிர்மீள்' தருமு; ஔரூப் சிவராம்*

---

* 'பிர்மீள்' தருமு: ஔரூப் சிவராம், கைப்பிடியளவு கடல் ராஜபாளையம்: மணி பதிப்பகம், முதற் பதிப்பு 1976. ப. 64. விலை ரூ. 8-00.

11. எனது தேவைகள்

கொஞ்சம் முகம் பார்த்து தலை சீவ ஒரு
சந்திரன்
லோஷன் மணக்கும் பாத்ரூம்
என் மனக் குதிரைகள் நின்று அசை போட
ஒரு லாயம்
என் கையெழுத்துப் பிரதியில் கண்டோடே
முகங் கொள்ளும் ஆனந்தச் சலனங்கள்
நான் காண, ஒரு பெண்
சிந்திக்கையில் கோத ஒரு வெண் தாடி
சாந்த சூரியன்
லேசான குளிர்
அடி மனத்தில் கவிதையின் நீரோடை.

—பசுவய்யா*

---

* பசுவய்யா (சுந்தர ராமசாமி) நடுநிசி நாய்கள்: சென்னை, க்ரியா வெளியீடு, இரண்டாம் பதிப்பு 1980, ப.50. விலை ரூபாய் 5.



12. நாகரிகம்

விண்வெளிக் கப்பலில்
வெகுதூரம் சென்றேன்
காலை வலித்தது
ஓய்வு எடுக்க வேண்டி
கிராமத்தில்
என் வீட்டுக்கு வரப் பார்த்தால்
அடையாளம் தெரியவில்லை.

—தி.சோ. வேணுகோபாலன்*

---

* தி-சோ. வேணுகோபாலன், மீட்சி விண்ணப்பம், சென்னை: க்ரியா, முதற் பதிப்பு 1977 -விலை ரூ. 5.00.



13. உபதேசம்

‘நீ புகை பிடிக்காதே’ என்று
என் தாத்தா தந்தைக்குச் சொன்னதை
என் மூலம் மகனும் தெரிந்து கொண்டான்.
இது நிஜம்.
(ஆனால்) நாங்கள் யாவரும்
விரும்பிக் குடிப்பது
மிக உயர்ந்த ரகம்.
என் பேரனே சாட்சி!

—எஸ். வைதீஸ்வரன் *

---

* எஸ் வைதீஸ்வரன், உதய நிழல், சென்னை: புக் வெஞ்சர். முதற்பதிப்பு 1970, ப. 36. விலை ரூ. 3-00.

14. ஒரு சேரிக் கிராமமும் தபால்காரரின் மரணமும்

மாசிப் பிறையடிக்கும்
  ராத்திரிகள் சொல்ல வேணும்
மசங்கலிலே விளையாடும்
  மழைமேகம் சொல்லவேணும்

எழுத்துச் சுமைகாரர்
  எங்களூரு தபால்காரர்
எழுத்து மங்கும் சாயங்காலம்
  எமனோடு போனதென்ன?

தரை அழுகும் பறைச் சேரித்
  தரைமெழுக வந்த துரை
தரைக்குள்ளே போனதென்ன?
  தனித்தூக்கம் ஆனதென்ன?

நீண்டசையும் மருதாணி
  நிழல் எழுதும் எழுத்தாணி
எழுத்தாணி சாய்ந்தபின்னால்
  எங்கும் வெயில் வெள்ளெழுத்து.

தம்பிடிகள் சேர்த்துத்
தங்கருபா உண்டு பண்ணி
முழு நெலாவில் கடை சேந்தோம்
முழுருபாய் செல்லலியே!

தாளென்றும் இடுகென்றும்
தலைச்சுமைகள் கொண்டுவந்தும்
கூரை நிலைக்கலியே,
சாரலுக்குப் பொறுக்கலியே!

ஊர்க்கோடிச் சாவடியில்
ஒளி விளக்கு எரிஞ்சாலும்
விழவெளக்கு எரியலியே,
வியாசர்கதை முடியலியே.

கடுதாசி குடுத்தவுக
கைவீசிப் போனதென்ன!
காலன் எமராஜன்
கைநாட்டுப் பேர்வழியோ?

மசானத்துத் தீ கூட
தபால்பெட்டி நிறமிருக்கும்
ஜனங்களெல்லாம் கடுதாசி
ஜனன மரணம் தபால்காரர்.

—நா. காமராசன்*

* நா. காமராசன், கறுப்பு மலர்கள், சென்னை: பாவைப் பதிப்பகம், முதற்பதிப்பு 1971, பக்.37-38. விலை ரூ.3-00.

15......

உன் நெற்றியைப் பார்த்து விட்டு
''எந்தக் கோயிலுக்குப்
போய் விட்டு வருகிறுய்''
என்கிறேன்.

''முருகன் கோவிலுக்கு...''
பதில் பஞ்சாமிர்தமாய் வருகிறது.

''அவன்
ஒரு மயில் மேல் மட்டுமல்ல
இரு மயில்களோடும் இருக்கிருன்
என்பதை மறந்துவிட்டாயா?''
என்கிறேன்.

''அந்தத் துணிச்சலில்
அரைவாசியாவது
உங்களுக்கு இருந்தால்
இந் நேரம்...
என்று தான் நினைத்துக்கொண்டு வருகிறேன்''

உன் பதில் வேலாய் வந்து விழுகிறது.

நீ பொல்லாதவள்!

—*மீரா**

---

* *மீரா. கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள், சிவகங்கை: அன்னம் வெளியீடு, மூன்ரும் பதிப்பு 1978, கவி.59. விலை ரூ.4.*

16. அடையாளம்

காந்தி கண்ட
இராம ராஜ்யத்தில்
கூனி உண்டா?

உண்டு.
நிமிர்ந்திருப்பாள்
யாருக்கும் அடையாளம்
தெரியாது.

தமிழன்பன்*

---

* தமிழன்பன், தோணி வருகிறது, சிதம்பரம்: மணிவாசகர் நூலகம், முதற்பதிப்பு 1973, ப.95. விலை ரூ. 3-50.



17. குற்றவஞ்சி

ஓடக் காண்பது
என்னவர் மானம்
ஒடுங்கக் காண்பது
ஒரு ஜாண் வயிறு

வாடக் காண்பது
தேசீய உணர்வு
வருந்தக் காண்பது
விடுதலை வீரர்

போடக் காண்பது
ஜால்ரா குல்லாய்
புலம்பக் காண்பது
தேர்தலில் தோற்ருர்

தேடக் காண்பது
உழைக்காத செல்வம்
திருடர் மலிந்த
நவபாரத நாடே...

—தமிழ்நாடன்*

---

* தமிழ்நாடன், மண்ணின் மாண்பு, சேலம்:பாபு புக் மேக்கர்ஸ், முதற்பதிப்பு 1973, ப.2.விலை ரூ.1.

18. சிகரெட்

மண்ணில் விளைந்தேன்
இயந்திர நெருக்கில்
என் உருச் சிதைந்தேன்;
இன்று நான்......
உங்கள்

உதட்டு முத்தத்தில்
உள்ளம் கனன்று
இதயத்து மூச்சில்
இடம் பெறும் காதலி!

சித்திரப் பெட்டியில்
ஜிகினுப் படுக்கை;
நித்திரை கலைந்ததும்
நெருப்பு நீராட்டு!

அரசியல் வாதியின்
ஆயுதக் கூடம்;
திரை நடிகனுக்கு நான்
திருக்குறள் பாடம்!

சாம்பல் அணுக்களின்
சயன மண்டபம்;
பாம்பு நோய் உறையும்
புற்றின் கோட்டை!

நாற்றக் குடும்ப
தம்பிமாரோடு
காற்றைக் கெடுக்கும்
புகை போக்கி வரிசை!

கடையில் வெள்ளை
உடையில் இருந்து பின்
நெடு நெருப்பில்பாய்
ரஜபுத்திர ராணி!

ஒரு கணம் பழுத்து
மறுகணம் உதிரும்
சிறு சிறு சிவப்புக்
கனிகளின் தோட்டம்!

நெஞ்சில் மயக்க
நெருப்பை ஏற்றி
நஞ்சாய்க் கிறக்கும்
நாதம் இல்லாக் குழல்!

உறவுக்கும் நட்புக்கும்
பாலம் இடும் கலை!
இரு விரல் நடுவில்
புகையும் எரிமலை!

கற்பனைத் தேருக்கு
வெள்ளிச் சங்கிலி
கோத்துத் தருகிற
கொல்லன் பட்டறை!

வயதும் சாதியும்
பார்க்காத ஞானி;
துயரிலும் சிரிப்பிலும்
புகைவது என் மேனி!

மனிதனின் வாய்— என்
மரணக் கிணறு!
கனவுகள் ஊறிச்
சுரக்குமா அங்கே?

—சிற்பி*

---

* சிற்பி, ஒளிப்பறவை, பொள்ளாச்சி: கோலம் ' வெளியீடு. மூன்றும் பதிப்பு 1980, பக்,59-61, விலைரூ.5.



19. யார் தெரியுமா?

நாங்கள் வெயிலைத்தாங்குவது
எப்படித் தெரியுமா?
வெயிலில் பொசுங்கி.

நாங்கள் மழைக்கு ஒதுங்குவது
எப்படித் தெரியுமா?
மழையில் நனைந்து.

நாங்கள் பசியை விரட்டுவது
எப்படித் தெரியுமா?
பட்டினி கிடந்து.

நாங்கள் நோயை ஒழிப்பது
எப்படித் தெரியுமா?
செத்துத் தொலைந்து.

நாங்கள் யார்...
தெரியுமா?

—தமிழவன்*

* வெளிச்சங்கள் (வானம்பாடிகளின் மானுட கீதம்), கோவை: வைகறை வெளியீடு, முதற்பதிப்பு 1973, ப.67. ரூ.4.

20. அரளிப்பூ அழுகிறது

பூக்களிலே நானுமொரு
பூவாய்த்தான் பிறப்பெடுத்தேன்

பூவாகப் பிறந்தாலும்
பொன்விரல்கள் தீண்டலையே

பொன்விரல்கள் தீண்டலையே—நான்
பூமாலை யாகலையே!

—மு. மேத்தா*

* மு. மேத்தா, கண்ணீர்ப் பூக்கள், கோயமுத்தூர்: விஜயா பதிப்பகம், ஒன்பதாவது பதிப்பு 1982, ப. 36. விலை ரூ. 5.



21. ஒரு தூங்காத தாலாட்டு

கண்ணே! கண்மணியே!
கறுப்பா, நீ கண்ணுறங்கு!
கண்ணுறங்கு, கண்ணுறங்கு!
காலமெல்லாம் கண்ணுறங்கு!
தப்பிப் பொறந்தவனே
தரித்திரமே, கண்ணுறங்கு!

ஏன்தான் இப்படி நீ
ஏங்கி அழுகின்ருய்?
வயிற்றில் அடிச்சாரோ?
வட்டலில் மண் போட்டாரோ?

எசமானர் வைதாரோ?
ஏங்க விட்டுத் தின்ருரோ?
ஏங்க விட்டுத் தின்னபின்னே
இடியேப்பம் விட்டாரோ?

நாளையுந்தன் வாசலிலே
நாப்பதுபேர் வந்துநிற்பார்!
நாப்பது பேர் நடுவாலே
மந்திரியும் வந்துநிப்பார்!

வந்தவர்கள் பல்லிளிப்பைப்
பார்த்தால் பசி மறக்கும்.
பல்லவனே! பாண்டியனே!
பார்த்திபனே! கண்ணுறங்கு!

எழு கடல் தாண்டி — உங்கப்பன்
ஏலக்காய் மலையேறி
பசியாப் பழம் பறிக்கப்
போயிருக்கார் கண்ணுறங்கு!

வேளை வரும் வரைக்கும்
வெறும்பயலே! கண்ணுறங்கு!
ராசாங்கம் பார்ப்பவர்போல்
ரத்தினமே கண்ணுறங்கு!

கண்விழித்துப் பார்த்தாலோ
காரணங்கள் புரிந்துவிடும்;
காரணங்கள் புரிந்தாலோ
கனலாக நெஞ்செரியும்;

நெஞ்செரிய விட்டாலோ
நெற்றிக்கண் திறந்துவிடும்;
நெற்றிக்கண் திறக்க
நேரமின்னும் வரவில்லை!

வந்தால் எழுப்புகிறேன்;
வாய் மூடிக் கண்ணுறங்கு!
கண்ணுறங்கு! கண்ணுறங்கு!
காலம் வரும்! கண்ணுறங்கு!

—புவியரசு*

* புவியரசு, இதுதான், சிவகங்கை: அன்னம் வெளியீடு முதற்பதிப்பு, 1975, பக், 79-80. விலை ரூ. 5-00.



22. முதல் வேலை நிறுத்தம்

ஒரு மழைக் காலத்தில்
வைகை சீறி வெள்ளம் பெருக
மதுரைச் சொக்கன் என்ற ஒரு தொழிலாளி
அணைக்கட்டுக்கு மண்சுமக்க மறுத்து
வேலை நிறுத்தம் செய்ததற்காக
பாண்டியன் அடித்த சவுக்கடி
சுரீர் எனப்பட்டு
ஜீவராசிகள் உடலெலாம்
சுவடு பதித்தது!
சொரணை கொடுத்தது!

—*சக்திக்கனல்**

---

* *சக்திக்கனல், கனகாம்பரமும் டிசம்பர்ப் பூக்களும், சிவகங்கை அகரம் வெளியீடு, முதற்பதிப்பு 1976, ப.21. விலை ரூ. 4.00*

23. ……

வேலைக்காரப் பெண் அவள்; அனாதை போல.
குடம் தூக்கி வீடுகளுக்குத்
தண்ணீர் எடுத்து ஊற்றிக் கொண்டிருப்பாள்;
கிணற்றடியில் அமர்ந்து
பாத்திரம் துலக்கிக் கொண்டிருப்பாள்;
சாப்பாட்டுப் பாத்திரங்கள் அள்ளிச்
சுமந்து கொண்டு செல்வாள் ரோட்டில்;
இரண்டு கைகளிலும் பைக்கட்டும் அதன்
சிறுவர்களும் பற்றிவர
அவர்கள் நடையினுக்கு
இசைந்து இசைந்தே தான்
இம் மென் னடை கற்றிருப்பாள்;
கண்களில் எப்போதும்
காணும் ஒரு ஆழ்கடல் சோகம்.
மத்யானப் பொழுதில், கணுக்கால் நீரில்
துணி துவைத்து வைத்துவிட்டு
இந் நதிக்குள்ளே இறங்கிப் போவாள்.
அப்போது மாத்ரமே
அந்த ஒளியை நான் கண்டிருக்கிறேன்
அவள் முகத்தில்
ஒரு அன்யோன்யமான,
அந்தரங்கமான,
உறவில் வெளிப்படும் வெளிச்சத்தை!

—தேவதேவன் *

---

* தேவதேவன், குளித்துக் கரையேறாத கோபியர்கள், தூத்துக்குடி: கைவல்யம் வெளியீடு, முதற்பதிப்பு 1976, பக்.௫௰, விலை ரூபாய் 7-00.



24. ஒரு வேண்டாத தாலாட்டு

கண்ணே கருமணியே
கண்ணுறங்கு கண்ணுறங்கு
எண்ணுக் கடங்காத
இருப்பே நீ கண்ணுறங்கு

ஈசன் துணையிருக்க
எம்பெருமான் பார்த்திருக்க
பூசை யறையிலல்லோ
புதையலே உன் படுக்கை

பொழுது முகங்கண்டால்
பொல்லாங்கு நேருமென்று
முழுது முனையிருட்டில்
மூடிவைத்துக் காத்திருக்கோம்

வீதிக்கு நீ வந்தா
வெகுசனங்க கண்ணுப்படும்
நீதியுனேக் கண்டா
நிட்டூர மாகிவிடும்

பாட்டாளிமார்களது
பச்சைரத்தப் பாலாலே
ஊட்டி வளர்க்கையிலே
உனக்கென்ன வந்ததடி

நீ கேட்டா
தங்கத்தால் பிஸ்கோத்து
டாலரிஞல் லோலாக்கு
மங்காத வைரமணி
உனக்கு மஸ்தாஞ வெளிச்சரக்கு

வருமான வரி அத்தை
மாபாவி கொள்ளிக்கண்
எரிய உனேப் பார்த்தாள்
என்ரு கலங்குகிருய்

அவளேச் சரிசெய்வார்
ஆடிட்டர் உன் மாமன்
கவலே யொதுக்கிவிட்டுக்
கண்மூடி நீயுறங்கு

உன்னுடைய ராசாங்கம்
உன்னுடைய மந்திரிமார்
என்ன குறையுனக்கு
இப்படியே கண்ணுறங்கு.

—தேனரசன்*

* தேனரசன், வெள்ளே ரோஜா, சிவகங்கை: அன்னம் வெளியீடு. முதற் பதிப்பு 1978. பக். 26-28. விலே ரூ. 5-00.

25. உள் பாடு

இந்தப் பழக்கம்
விட்டு விடு

எங்காயினும்
வானிலேனும் மண்ணிலேனும்
புள்ளியொன்று கிடக்கக் கண்டால்
சுற்றிச் சுற்றி
வட்டங்கள் வரைவதும்
சுழன்று சுழன்று
கோலங்கள் வரைவதும்

குறுக்கும் நெடுக்குமாய்ப்
புள்ளியின் வழியே
பரபரத்துத் திரிவதும்—

இந்தப் பழக்கம் விட்டு விடு

முடிந்தால்

புள்ளியைத் தொட்டுத் தடவி
அதன் மூடிதிறந்து
உள் நுழைந்து
விடு.

—அபி*

---

* அபி, அந்தரநடை, சிவகங்கை: அன்னம் வெளியீடு, முதற் பதிப்பு 1979, ப. 52. விலை ரூ. 8-00.

26. இயற்கை ஏடுகள்!

கறுப்புக் கைகளால் இரவு — பகலின்
காட்சியைக் கைது செய்கின்ருன்!

நெருப்புக் கைகளால் எழுதி — இந்
நிகழ்ச்சியைக் கதிரவன் தண்டிக்கின்ருன்!

கிழக்கு அலுவலகத்தில் — வெளிவரும்
கிளர்ச்சி ஏடு விடிகாலே!
முழுக்க மூடும் இரவின் — கறுப்பு
முக்காட்டை எதிர்ப்பது இதன் வேலே!

மேகச் சந்தாதாரர் — படிக்க
விரித்த ஏடு மயில்தோகை
தோகை ஏடு விரியும் — ஆயிரம்
தொகையாய்க் கலேகள் தெரியும்!

வைய இயற்கை அழகாய் — நம்முன்
வைக்கும் ஏடுகள் எல்லாம்
பொய்யைச் சொல்லுவதுண்டா?-வீண்
புரட்டை விற்பதுண்டா?

—இன்குலாப்*

---

* இன்குலாப் கவிதைகள், சிவகங்கை: அகரம் வெளியீடு, இரண்டாம்பதிப்பு 1981, ப, 74 விலே ரூ, 5-00.

27. தோழர் மோசிகீரனர்

மோசிகீரா
மகிழ்ச்சியினுல்
மரியாதையை நான்
குறைத்ததற்கு
மன்னித்தருள வேண்டும் நீ

சொந்தமாக உனக்கிருக்கும்
சங்கக் கவிதை யாதொன்றும்
படித்ததில்லை நான் இன்னும்

ஆனல் உன்மேல் அளவிறந்த
அன்பு தோன்றிற்று
இன்றெனக்கு

அரசாங்கத்துக் கட்டிடத்தில்
தூக்கம் போட்ட முதல்மனிதன்
நீதான் என்னும் காரணத்தால்.

—ஞானக்கூத்தன்*

* ஞானக்கூத்தன், அன்று வேறு கிழமை, சிவகங்கை: அகரம், இரண்டாம் பதிப்பு 1980, ப.19. விலை ரூ 8-00.

28. கண்ணும் எழுதேம்

கண்ணில் என்
மை தீட்டவில்லை
என்கிருயா தோழி?
சொல்கிறேன்:

கண்ணுக்குள் என்
காதலர்
அவர் முகத்தில்
கரி பூசலாமா?

என் சூரியன்மீது
இருட்டைத் தடவுவதோ?

வீட்டிற்குள்ளே அவர்;
வாசலில் எதற்கு
வரவேற்புக் கோலம்?

அவனையே தீட்டி
அழகுபெற்ற கண்ணுக்கு
மையலங்காரம்
வேண்டுமா?

கண்ணைவிட மென்மையானவர்
காதலர்
கோல் பட்டால் வலிக்காதா?

அவரை வைத்த இடத்தில்
வேருென்றை வைப்பது
கற்புக்கு இழுக்கல்லவா?

—அப்துல் ரகுமான்*

---

* அப்துல் ரகுமான், நேயர் விருப்பம், சிவகங்கை: அகரம் வெளியீடு, இரண்டாம் பதிப்பு 1980, பக். 89-90. விலை ரூ. 6-00.



29. ஜப்தி

நாடாளுமன்ற
உறுப்பினர்களின்
தொலைபேசி பாக்கி
ஒரு லட்சத்துக்கு மேல்...
ஒன்றுமில்லை கேள்வி!

நாட்டுக்கு உழைக்கும்
உழவன் நான்!
நான் கட்ட
வேண்டிய தீர்வை பாக்கி
ஒன்பது ரூபாய்...
ஜப்தி
என் கதவு

—கொ.ச. பலராமன்*

*கொ.ச. பலராமன், புதுக்கணக்கு, சிவகங்கை: அகரம் வெளியீடு முதற்பதிப்பு 1978, ப. 12. விலை: ரூ. 2-50:

30. விளம்பரம்

விண் முட்டும் கோபுரம்
விரைந்தேன் உள்ளே
ஜீவகளை சொட்டும்
எழில் மிகு சிலை
சொக்கி நின்றேன்
எந்தக் கலைஞனின்
கை வண்ணமிது
விடை இல்லை
சிலைக்கு மேலே
குழல் விளக்கு
இன்னார் உபயமென்று
பிரகாசமாக
எடுத்தியம்பின
எழுத்துக்கள்.

—கொ.மா.கோதண்டம்*

---

* கொ.மா. கோதண்டம், கோழிக் குட்டிகளும் பன்றிக் குஞ்சுகளும், இராஜபாளையம்: விசுவசாந்தி பதிப்பகம், முதற் பதிப்பு 1978, ப.13. விலை ரூ. 4-00.

31. குருடர் பள்ளியில் கொடியேற்றம்

விழியுள்ள கனவான்
விழாக் கொடியேற்ற,
வெறும் கை தட்டலுடன்
வெள்ளி விழாவென்று
களித்தனர், சுற்றி நின்ற
கண்ணற்றவர்.

—*கலாப்ரியா**

* கலாப்ரியா. மற்றுங்கே, சிவகங்கை: அன்னம் வெளியீடு முதற் பதிப்பு 17, ப,1919. விலை ரூ 6-00.



32. மனித உரிமை

தட்டுங்கள்
தடுக்கப் படும்.
குட்டுங்கள்
கொடுக்கப்படும்.

—க. இளங்கோவன்*

* க. இளங்கோவன் (சிங்கப்பூர்), விழிச் சன்னல்களின் பின்ன விருந்து..., சிவகங்கை: அகரம் வெளியீடு, முதற்பதிப்பு 1979, ப.80.



33. சோஷலிசத் தலாட்டு

அஹிம்சை அஹிம்சையிண்ணு
பாரதத்தாய் கர்ப்பமெல்லாம்
அழிஞ்சழிஞ்சு போகுதுண்ணு...
ஆயுதம் போட்ட பின்னே
அழுதழுது பெத்த கண்ணே!

தரையெல்லாம் மேடு பள்ளம்
தாயார்க்கு உறுத்துதுண்ணு...
தரைமொழுகிச் சமமாக்க
தவமாத் தவமிருந்து
சமத்தாய் பிறந்த கண்ணே!

—ஏ.தெ. சுப்பையன்*

* ஏ.தெ. சுப்பையன், அறைகூவல், சென்னை: சிகரம் வெளியீடு முதற் பதிப்பு 1980, ப.16. விலை ரூபாய் 6-00,

34. கண் மூடல்

மேற்கும் கிழக்கும்
பலமுறை நடந்துவிட்டேன்
அந்தப் பஸ் ஸ்டாப்பில்.

அவர்கள் பேச்சு
இன்னும் ஓயவில்லை,
இமைகள் பிரியவில்லை.

இதழ்களில்
எச்சில் மணக்கும்
வார்த்தைத் துணுக்குகள்
இன்னும் முடியவில்லை.

தொடர்ச்சிக்காக
அவளில் அவனில்
ஒத்திகை.

நாடக முடிவை எண்ணி
நான்,

அவர்களுக்குக் கொஞ்சம் தள்ளி
அமர்ந்து கொண்டு
கண்களை மூடிக் கொண்டேன்.

—துரை. சீனிச்சாமி*

* துரை. சீனிச்சாமி, உரித்த யானை, சிவகங்கை: அகரம். முதற்பதிப்பு 1980, ப.24. விலை ரூ 4-00.



35. கிளிகள்

கிளிகள்
பச்சைத் தாவணி போட்ட
பருவப் பெண்கள்
கழுத்தில்
கருகமணி மாலை அணிந்த
கல்லூரி மாணவிகள்
மூக்கு மட்டுமே
தெரியும் வண்ணம்
முகத்திரை இட்டுக் கொண்ட
முகலாய இளவரசிகள்
வாழ்க்கையில்
மிஸ் பண்ணக் கூடாத
'மிஸ் யூனிவர்ஸ்'
அழகிகள்!

—ஆர்.எஸ். மூர்த்தி*

---

* ஆர்.எஸ்.மூர்த்தி, வலைகள், மேலையூர்: சதீஷ்குமார் பதிப்பகம் முதற்பதிப்பு 1979, ப. 10. விலை ரூ 4-00.

36. தரிசனம்

கடவுளைக் கண்டேன்
எதையும் கேட்கவே தோன்றவில்லை
அவரும் புன்னகைத்துப்
போய் விட்டார்
ஆயினும்
மனதினிலே ஒரு நிம்மதி.

—ஆத்மாநாம்*

---

* ஆத்மாநாம், காகிதத்தில் ஒரு கோடு, சென்னை: ழ வெளியீடு, முதற்பதிப்பு 1981, ப.40. விலை ரூபாய் நான்கு.



37. சட்ட சபை

நெருப்பாய்ப்
பிரச்னைகள்
நிறைந்துகிடக்க,
செருப்புகள் மட்டுமே
சீறிப் பாயும்...
இது
சட்ட சபையல்
'மட்ட சபை'...

—இரா. வேலுச்சாமி*

* இரா. வேலுச்சாமி, குருக்ஷேத்ரம், சென்னை: சிலம்பா பதிப்பகம், முதற் பதிப்பு 1981, ப.64 விலை ரூ. 6-00.

38. பரிசுக்காக

மலர்களைப் பரிசளிக்க
முன் வருகிறீர்கள்...
வாருங்கள்.
விரல்களற்ற முடமான
கரங்களினால்
எப்படி வாங்குவேன்?
அன்றொரு நாள்—
உயரத் தூக்கிய
கரங்களை
வெட்டி வீழ்த்தியது
நீங்கள் தானே?
மலர்களைக் கோர்த்து
மேலங்கியில் வைக்கவோ
நான் நிர்வாணியாயிற்றே.
வேண்டுமானால்
நெஞ்சின் சதை மேட்டில்
நெருக்கமாய்க்
குத்திவிட்டுப் போங்கள்
பரிசுக்காகக் கொஞ்சம்
குருதிதான் சிந்தட்டுமே!

—நா. விச்வநாதன்*

---

* நா. விச்வநாதன், சுதந்திரம், சிவகங்கை: அன்னம் வெளியீடு முதற்பதிப்பு 1982, ப.9. விலை ரூபாய் 4-00.



39. தகுதி

‘‘என்ன செய்து கொண்டு
இருக்கிருய் இப்போ?’’
என்று நானும்
இனிமேல் கேட்கலாம்
எனக்கு வேலை கிடைத்து விட்டது.

—கல்யாண் ஜி*

*கல்யாண் ஜி (வண்ணதாசன்). புலரி, சிவகங்கை; அன்னம் வெளியீடு, முதற்பதிப்பு 1981, ப:25, விலை ரூபாய் 4-00.



40. பள்ளு

''சுதந்திரம் வந்தாச்சு''
சொர்க்கம் சமீபத்திலென்றூர்
சொர்க்கத்தைப் பார்த்தவர்கள்
உடனே தகவல் தாருங்கள்.

—வண்ண நிலவன்

* வண்ண நிலவன், மெய்ப்பொருள், சிவகங்கை: அன்னம் வெளியீடு, முதற்பதிப்பு 1981, ப.16, விலை ரூபாய் 3-00.

41. விடுகதை

இந்தத் தேசத்திலேயே
மிகவும் உயர்ந்தவன்
கிராம வாசியா
நகர வாசியா
இல்லை
விலைவாசி.

—கந்தர்வன்*

---

* கந்தர்வன், கிழிசல்கள், சிவகங்கை: அகரம் வெளியீடு, முதற் பதிப்பு 1981 ப. 52, விலை ரூ 6.



42. கணக்குப் பார்க்கையில்

இந்திய மண்ணில்...
வியாபாரஞ் செய்ய வந்தவர்கள்
அரசியல் நடத்தினார்கள்!
அரசியல் நடத்த வந்தவர்கள்
வியாபாரஞ் செய்கிறார்கள்!
இரண்டிலும்
நட்டப்பட்டது மட்டும்
நாம் நானே இந்தியனே!

—இரா.வைரமுத்து*

---

* இரா. வைரமுத்து, திருத்தி எழுதிய தீர்ப்புகள் சென்னை: கலைஞன் பதிப்பகம், நான்காம் பதிப்பு 1982 ப, 116. விலை ரூ 6.

43. ஆண்டவனுக்கே வெளிச்சம்

இந்த தேசம்—
ஆதியில்
அரசர்கள் கையில்
இருந்தது...

அதன்பின்
அந்நியர்கள் கையில்
இருந்தது...

தற்போது
அரசியல் வாதிகளின்
கையில்
இருக்கிறது...

எப்போது
மக்களின் கைக்கு
வந்து
சேரும்?

—வாலி*

* வாலி, பொய்க்கால் குதிரைகள், சென்னை: வானதி பதிப்பகம், முதல் பதிப்பு 1982, ப. 143. விலை: ரூ 10.00.



44. விடுமுறை விண்ணப்பம்

கே. குப்புசாமி
6.ம் வகுப்பு (சி பிரிவு)
அரசு மேல் நிலைப்பள்ளி.

தேதி:
15, ஆகஸ்ட் 1983

மதிப்புள்ள வாத்தியாருக்கு...

நேத்து ராத்திரி
என்னோட அப்பாவை
யாரோ சாதிச் சண்டையிலே
அடிச்சுக்கொன்னு எரிச்சிட்டாங்க;

அம்மா உடம்பு சரியில்லாம
தர்ம ஆஸ்பத்திரியில
படுத்துருக்காங்க;

வேலே தேடி
பட்டணம் போன அண்ணன்
இன்னமும் வீடு திரும்பலே;

வயசுக்கு வந்த
என்னேட அக்காவையும்
நாலு நாளா காணலே...

என்னேட டவுசர்
பின்பக்கமும் கிளிஞ்சி போயிடுச்சு;

அதனுல ஐயா,
இன்று நம் பள்ளியில
நடைபெறும் சுதந்திர தினவிழாவில
கொடியேத்த மந்திரி வரும் போது
என்னுலே வரமுடியாது!

இப்படிக்கு
உங்கள் கீழ்ப்படிந்துள்ள மாணவன்
கே. குப்புசாமி

—எஸ். அறிவுமணி*

---

* எஸ். அறிவுமணி, கறுப்பு மை சிவப்பு எழுத்து, சென்னை: பாரதி பதிப்பகம், முதற் பதிப்பு 1983, ப. 7. விலை ரூ. 5-00



45. என்னைக் கவர்ந்தவர்

இராமாயணத்தில்
எனக்குப் பிடித்த பாத்திரம்
வண்ணான் தான்.

ஏனென்றால்

உதாரண புருஷனான
ஸ்ரீராமன் உள்ளத்திலிருந்த
சந்தேக அழுக்கை
'வெளுத்தவன்' அவன் தானே?

—வ. தேனப்பன்*

* வ. தேனப்பன், கனவு அன்னங்கள், தேவகோட்டை: தேன் வள்ளியம்மை பதிப்பகம், முதற்பதிப்பு 1982, ப. 31. விலை: ரூ 6-00

46........

குயிலாகப் பிற ' திருந்தால்
சோகத்தைக்
கூவியே தீர்த்திருப்பேன்.

கோடை மழையாகப்
பிறந்திருந்தால்
கண்ணீரைக்
கொட்டியே தீர்த்திருப்பேன்.

நிலவாகப் பிறந்திருந்தால்
நினைவுகளைத்
தேய்த்தே மறந்திருப்பேன்.

காட்டுப் பூவாகப்
பிறந்திருந்தால்
உணர்வுகளைக்
காய்த்தே உதிர்த்திருப்பேன்.

இதயத்தோடு பிறந்ததால்
சோகங்களைச்
சுகமாக்கி வாழ்கிறேன்.

—கோகிலா தங்கசாமி*

---

* கோகிலா தங்கசாமி, சுகமான சோகங்கள், கோயமுத்தூர்: விஜயா பதிப்பகம், இரண்டாம் பதிப்பு 1984, ப.100 விலை ரூ. 7.



47. மண்ணின் மைந்தர்கள்

நாங்கள்
அமுத சுரபியை
அடகு வைத்த
ஆ புத்திரர்கள்!

இந்திய சஹாராவை
உழுகின்ற ஒட்டகங்கள்!
உங்கள் உடல் எந்திரங்களை
ஓட வைக்கின்ற எண்ணெய்க் கிணறுகள்!

நாங்கள்
கால் நடைகளை
ஏரில் பூட்டுவதால் தான்
நீங்கள்
கால் நடையை மறந்து
காரில் போகிறீர்கள்!

எங்களின் உடல்
சூரிய வெளிச்சத்தில்
சுத்திகரிக்கப்பட்டாலும்
உற்பத்தி என்னவோ
உங்கள்
செல்வ வயிறுகளில் தான்
சேமிக்கப்படுகிறது!

என்றாலும்
நாங்கள் சேற்றில்
கால் வைத்தால் தானே
எவரும்
சோற்றில் கை வைக்க முடியும்?

*திரு. இராமநாதன்**

* திரு. இராமநாதன்: விழித்தடங்கள், முகவை: மணிமேகலை கவியகம். முதற்பதிப்பு 1983, ப. 63; விலை ரூ. 2-50

48......

என்ன வரம் வேண்டும்
என்கிறுர் கடவுள்
அது தெரியாத
நீர் என்ன கடவுள்?

—நீலமணி*

---

* நீலமணி, தீர்க்க ரேகைகள், சிவகங்கை: அகரம் வெளியீடு, முதற்பதிப்பு 1983, ப. 33. விலை. ரூ.4-00



49. தரமானவன்

வலுவில்லாமல் இருந்தது
வழக்கம் போல்
வினாத் தாள்...
'திருவள்ளுவர் பற்றி
சிறு குறிப்பு வரைக!'

'அடிக்கடி
விபத்துக் குள்ளாகும்
இது
ஓர்
அரசுப் போக்குவரத்து
நிறுவனம்' என்று
ஆத்திரத்தோடு
ஆரம்பித்தான்,
கொஞ்சம்
ஆணித்தரமானவன்.

—வெ.த.புகழேந்தி*

---

*வெ.த. புகழேந்தி. விலகமறுத்த வெளிச்சம், சென்னை: கவிதா பப்ளிகேஷன் முதற்பதிப்பு 1983, ப. 20, விலை: ரூ.6-00

50. 'பெரியர்'

உயிருக்கு உயிராய்
கூடிக் குலவும்
நண்பர்கள் இருவர்
உயர் பதவிக்கு மனுப்போட்டனர்,
ஒருவருக்கு ஒருவர்
சொல்லிக் கொள்ளாமல்—
'சொல்லாமல் செய்வர் பெரியர்...'

—இரா.மோகன்*

---

* இரா. மோகன் சின்னச் சின்ன இழை, மதுரை: ஏரக வெளியீடு முதற்பதிப்பு 1980 ப. 97. விலை ரூ. 6.

51. எழுத்து

பார்முலாவுக்கு
உட்பட்டு
இளம் பெண்கள்
தரும் தலைப்புக்கு,
முதல் வாக்கியத்திற்கு
ஆட்பட்டு
எழுதச் சொன்ன
பெரும் பத்திரிகைக்காரர்கள்.

எழுத்தை விட
ஆண்டு
ஆயுள்
சந்தாக்கள்
நன்கொடைகள்
விளம்பரங்கள்
நாடிய
சின்னப் பத்திரிகை
ஆசிரியர்கள்.

சங்கத் தலைவர்கள்
மதிப்புரை மகுடமிட்டு
முன்னுரை பெயர் போட்டு
எதிரிகளைக் கூப்பிட்டு
ஏளனம் செய்ய வைத்த
சிநேகித பத்திரிகை
அதிபதிகள்.

இந்த லட்சணத்தில்
எழுது
எழுது
என்றால்
என்னத்தை எழுத?
எங்கே எழுத?

—நீல. பத்மநாபன் ‡

---

‡ நீல. பத்மநாபன், நா காக்க..., சென்னை: நர்மதா பதிப்பகம் முதற்பதிப்பு 1983, பக். 39-40. விலை ரூ. 6-50.

எங்கள் புதிய வெளியீடுகள்

உலக மொழிகள்
—டாக்டர் ச. அகத்தியலிங்கம்

உலக விஞ்ஞானிகள்—
—வெற்றிச் செல்வன்

உலகப் பெருங் கவிஞர்கள்
—ப. கோதண்டராமன்

உலகப் பெருங் கவிஞர் கம்பர்
—இரா.வ. கமலக்கண்ணன்

உலகம் போற்றும் இந்திரா
—ச. மெய்யப்பன்

மணிவாசகர் நூலகம்

சிதம்பரம்

மணிவாசகர் பதிப்பகம்
Eswar

மணிவாசகர் பதிப்பகம்

மணிவாசகர் பதிப்பகத்தின் மலிவுப் பதிப்பு நூல்கள்

தாயுமானவர் பாடல்கள்	ரூ.15.00
சித்தர் பாடல்கள்	ரூ.22.00
பட்டினத்தார் பாடல்கள்	ரூ. 7.50
பாரதியார் கவிதைகள்	ரூ.17.50
பாரதியார் கவிதைகள் பாக்கெட் அளவு	ரூ.12.00
பாரதிதாசன் கவிதைகள்	ரூ.16.00
திருக்குறள் மூலம்	ரூ. 4.00
திருக்குறள் தெளிவுரை	ரூ. 7.75
விவேக சிந்தாமணி	ரூ.14.00
நடராஜர் புகழ் மாலை	ரூ. 2.50
கைவல்ய நவநீதம்	ரூ. 3.00
அபிராமி அந்தாதி (உரையுடன்)	ரூ. 3.00
அற்புதத் திருவந்தாதி	ரூ. 4.00
கற்பக விநாயகர் அருச்சனை	ரூ. 2.00
கந்தர் சஷ்டி கவசம்	ரூ. 3.00
சண்முக கவசம்	ரூ. 3.00
திருப்பாவை	ரூ. 3.00
திருவெம்பாவை	ரூ. 3.00
காரியசித்தி மாலை	ரூ. 7.50
நீதிநெறி விளக்கம்	ரூ. 4.00
வெற்றிச் சிந்தனைகள் (10 தொகுதிகள்)	ரூ.10.00
வெற்றித் தமிழ் அகராதி	ரூ.15.00
மீனாட்சி புகழ் மாலை	ரூ. 2.00
தெய்வப் பாமாலை	ரூ. 3.00
திருக்கோயில் பாமாலை	ரூ. 4.00
முருகன்தலங்கள் – 33	ரூ.12.00